Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/5.9.2024/Script/

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 5.9.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சிங்கப்பூரில், சிங்கப்பூர் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான், நாட்டில் வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரித்து இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாகே-யில், வளர்ச்சி திட்டங்கள் குறித்து, அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாநில நல்லாசிரியர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

மோடி சிங்கப்பூர் 1 (16)

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சிங்கப்பூரில், சிங்கப்பூர் பிரதமர் திரு லாரன்ஸ் வோங்-குடன், பிரதிநிதிகள் நிலையில் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து, சுகாதாரம், கல்வி, திறன் மேம்பாடு, டிஜிட்டல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பது குறித்தும், செமி கண்டக்டர் துறைக்கான கூட்டாண்மை குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையே, 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. கிழக்கு நோக்கி செயல்படுவதான இந்தியாவின் கொள்கைக்கு வலுவூட்டும் வகையில், இருதரப்பு உறவுகளின் அந்தஸ்தை உயர்த்தவும், இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

இந்தியா-சிங்கப்பூர் பிரதமர்களின் பேச்சு வார்த்தையில், இருதரப்பு உறவுகளின் முன்னேற்றம் குறித்து, விரிவாக மறு ஆய்வு செய்யப்பட்டது. இரு நாடுகளுக்கும் இடையே, வர்த்தகம் மற்றும் முதலீடுகளை மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

இந்தியாவின் முன்னணி பொருளாதாரக் கூட்டாளி நாடான சிங்கப்பூர், இந்திய பொருளாதாரத்தில், சுமார் 160 பில்லியன் டாலர் அளவிற்கு முதலீடு செய்திருப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி

தெரிவித்தார். இந்தியாவின் விரைவான, நீடித்த வளர்ச்சியினால், சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு பல புதிய வாய்ப்புகள் உருவாகி இருப்பதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு, நிதி தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே, தற்போதுள்ள ஒத்துழைப்பு குறித்தும், இரு தலைவர்களும் மறு ஆய்வு செய்தனர். இந்தியாவிற்கும்- சிங்கப்பூருக்கும் இடையே, போக்குவரத்து தொடர்புகளை வலுப்படுத்துவதன் மூலம், மக்கள் நிலையிலான உறவுகளை மேம்படுத்த வேண்டும் என இரு தலைவர்களும் அழைப்பு விடுத்தனர். அடுத்த ஆண்டு, இந்தியா – சிங்கப்பூர் உறவுகளின் 60 ஆம் ஆண்டை சிறப்பான முறையில் கொண்டாடுவது குறித்தும், பரஸ்பர அக்கறை உள்ள பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகள் குறித்தும், இந்த சந்திப்பின் போது விவாதிக்கப் பட்டது.

உலகின் அனைத்து வளரும் நாடுகளுக்கும் முன்மாதிரியாக சிங்கப்பூர் திகழ்வதாவும், இந்தியா-சிங்கப்பூர் உறவுகளின் வலுவான அஸ்திவாரமே, சிங்கப்பூரில் வாழும் மூன்றரை லட்சம் இந்திய வம்சாவளியினர் தான் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

மோடி சிங்கப்பூர் 3 (16)

இந்தியாவின் முதலாவது திருவள்ளுவர் கலாச்சார மையம் விரைவில் சிங்கப்பூரில் திறக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

பின்னர் திரு நரேந்திர மோடி, சிங்கப்பூர் பிரதமருடன் இணைந்து, ஏஇளம் செமி கண்டக்டர் நிறுவனத்தின் உற்பத்தி ஆலையை நேரில் பார்வையிட்டார். இந்த ஆலையில் பயிற்சி பெற்று வரும், ஒடிசா உலகத் திறன் மேம்பாட்டு மையத்தை சேர்ந்த இளைஞர்களையும், சிஐஐ திட்டத்தின் கீழ், இந்தியாவில் பயிற்சி பெற்ற இளைஞர்களையும், இருதலைவர்களும் சந்தித்துக் கலந்துரையாடினர். கிரேட்டர் நொய்டாவில் இம்மாதம் இறுதியில் நடைபெற உள்ள செமிக்கான்-இண்டியா கண்காட்சியில் சிங்கப்பூர் செமி கண்டக்டர் நிறுவனங்கள் பங்கேற்க வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி அழைப்பு விடுத்தார்.

தொடர்ந்து, சிங்கப்பூர் அதிபர் திரு தர்மன் சண்முக ரத்தினத்தை அவர் சந்தித்து, இருதரப்பு உறவுகளை மேலும் விரிவாக்கம் செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விவாதித்தார். பின்னர் பிளாக் ஸ்டோன், டெமாஸெக் உள்ளிட்ட முன்னணி சிங்கப்பூர் நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகளையும் அவர் சந்தித்து, பொருளாதார தொடர்புகளை ஆழப்படுத்துவது குறித்துப் பேசினார்.

மோடி சோலார் 1 (17)

சூரிய சக்தி மூலமான இந்தியாவின் மின் உற்பத்தித் திறன், கடந்த 10 ஆண்டுகளில், 32 மடங்கு அதிகரித்து இருப்பதாவும், புதை படிவம் அல்லாத ஆதாரங்கள் மூலமான நாட்டின் மின்சார உற்பத்தித் திறனை, 2030 ஆம் ஆண்டுக்குள், 500 கிகா வாட்டாக உயர்த்த, இதனால் ஏதுவாகும் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெறும் முதலாவது சர்வதேச சோலார் திருவிழாவில், வீடியோ மூலம் ஆற்றிய உரையில், அவர் இவ்வாறு கூறினார். புதுப்பிக்கத் தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலமான பசுமை மின் உற்பத்தியில் பாரீஸ் ஒப்பந்த இலக்குகளை பூர்த்தி செய்துள்ள முதலாவது ஜி-20 நாடு இந்தியா தான் என்றும், அவர் தெரிவித்தார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு இந்தியாவால் உருவாக்கப்பட்ட சர்வதேச சோலார் கூட்டணியில், குறைந்த காலத்திலேயே 100 நாடுகள் சேர்ந்திருப்பதாகவும், மேலும் 19 நாடுகள், உறுப்பினர் அந்தஸ்து பெறுவதற்கான நடைமுறைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதமர் கூறினார். ஒரே உலகம்-ஒரே சூரியன் என்னும் தொலைநோக்கு சிந்தனைக்கு சர்வதேச சோலார் கூட்டமைப்பின் வளர்ச்சி மிக அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*ஸ்வச் பாரத்* (13)

2014 – முதல், 2020 ஆம் ஆண்டு வரை, ஸ்வச் பாரத் இயக்கத்தின் கீழ் நாட்டில், 10 லட்சம் வீடுகளுக்கு கழிவறை கட்டித் தரப்பட்ட நிலையில், இதே கால கட்டத்தின் ஆரம்பத்தில் நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில், ஆயிரத்திற்கு 60 அல்லது அதற்கு அதிகமாக இருந்த சிசு மரண விகிதம், காலகட்டத்தின் இறுதியில், 30 க்கும் கீழாக குறைந்துள்ளது. ஸ்வச் பாரத் இயக்கமும்-சிசு மரண விகிதமும் என்பது குறித்து ஆய்விதழ் ஒன்றில் வெளியாகி உள்ள ஆய்வுக் கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த ஆய்வறிக்கையை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். முறையான கழிவறை வசதிகள் இருந்தால் சிசு மரண விகிதம் மற்றும் குழந்தை இறப்பு விகிதம் குறையும் என்பதற்கு இதுவே சான்றாகும் என்றும், தூய பாதுகாப்பான கழிவறை வசதிகள் மூலம் பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதில் இந்தியா முன்னணியில் இருப்பது குறித்து, தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் கூறியுள்ளார்.

*நிர்மலா* (12)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான் நாட்டில் வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரித்து இருப்பதாக, மத்திய

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று சென்னையில் வரி விதிப்பு சட்ட வழக்கறிஞர் சங்கத்தின் நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், நாட்டில் வருமான வரி செலுத்துவோர் எண்ணிக்கை 7.97 கோடியாகவும், ஜிஎஸ்டி செலுத்துவோர் எண்ணிக்கை, 1.47 கோடியாக அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். 60 சதவிகித நுகர்வுப் பொருட்கள் மீது 5 சதவிகித அளவில் மட்டுமே ஜிஎஸ்டி விதிக்கப்படுவதாகவும், முக்கியமான வரி சீர்த்திருத்தங்களால், வரி செலுத்தும் நடைமுறைகள், எளிதாகி இருப்பதாகவும் அவர் கூறினார். ஜிஎஸ்டி வருமானத்தை பகிர்ந்து கொள்ளும் நடைமுறையால், கூட்டாட்சி உணர்வு வலுப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்தார்.

கைலாஷ்நாதன் (18)

2 நாள் அரசு முறை பயணமாக மாகே சென்றுள்ள புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாகே மண்டல நிர்வாகி அலுவலகத்தில், வளர்ச்சி திட்டங்கள் குறித்து ஆய்வு கூட்டம் நடத்தினார். சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர் திரு ரமேஷ் பரம்பத், புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், மண்டல நிர்வாக அதிகாரி திரு மோகன் குமார் மற்றும் பல்வேறு துறைகளின் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர். மத்திய அரசின்

திட்டங்கள் மக்களை சென்றடையும் வகையிலும், மக்கள் அதிகம் பயன் பெறும் வகையிலும், திட்ட பெயர்களை வட்டார மொழிப்படுத்த வேண்டும் என, துணை நிலை ஆளுநர் கூறினார். மாகே பகுதியில் சுற்றுலா பகுதியாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவும், மாகே பகுதியின் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தும் வகையிலான பணிகளை மேற்கொள்ளவும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து மாகே-யில், 66 ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையின் புறவழிப் பாதை, துறைமுக வளாகம் உள்ளிட்ட இடங்களை துணை நிலை ஆளுநர் நேரில் பார்வையிட்டார். முன்னதாக, இன்று காலை மாகே வந்து சேர்ந்த துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ் நாதனுக்கு, காவலர் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப் பட்டது.

*ரங்கசாமி* (18)

புதுச்சேரியில் பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில், காமராஜர் மணி மண்டபத்தில் இன்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவை, முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்து, மாநில நல்லாசிரியர் விருதுகளை, வழங்கிச் சிறப்பித்தார். பணி ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் அவர் கௌரவித்தார். புதுச்சேரியில் சிறப்பான பள்ளிக் கல்வியும், உயர் கல்வியும் வழங்கப்படுவதே, பொருளாதாரம் சிறக்கக் காரணம் என்று அவர் கூறினார். படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்

வகையில், காலியாக உள்ள அரசு பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாக, முதலமைச்சர் தமது உரையில் கூறினார். சேதராப்பட்டில் சிறப்பு பொருளாதார மண்டலத்திற்காக கையகப்படுத்தப் பட்ட 750 ஏக்கர் நிலத்தில் பெரிய தொழிற்சாலைகளை கொண்டு வரவும், சுதேசி-பாரதி-ஏஎப்டி பஞ்சாலை வளாகங்களில் ஐடி பூங்கா மற்றும் கைவினை கலைஞர்களுக்கான ஏக்தா மால் விற்பனையகம் அமைக்கவும், நடவடிக்கை எடுக்கப் படுவதாக அவர் தெரிவித்தார். மாநில கல்வித்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, முதலமைச்சரின் பாராளுமன்ற செயலர் திரு ஜான்குமார், பள்ளிக் கல்வி இயக்குநர் திருமதி பிரியதர்ஷினி, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

ஆவண எழுத்தர் (5)

புதுச்சேரியில், ஆவணத் தயாரிப்பில் பட்டய படிப்பு முடித்த 45 பேருக்கு, பதிவுத் துறை மூலமான, ஆவண எழுத்தர் உரிமங்களை, இன்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பத்திரப் பதிவுத் துறை தலைவர், மாவட்ட பதிவாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி உதவி* (7)

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று இந்திராநகர் தொகுதியை சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் 8 பேருக்கு, மோட்டார் பொருத்திய 3 சக்கர வாகனங்களை வழங்கினார். சமூக நலத்துறை மூலம் மொத்தம் எட்டரை லட்ச ரூபாய் மதிப்பில் இந்த உதவிகள் வழங்கப் பட்டன. சட்டப் பேரவை வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, அரசு கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சமூக நலத்துறை இயக்குனர் திருமதி ராகினி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

*வெங்காயம்* (9)

சந்தையில் வெங்காய விலை அதிகரித்து இருப்பதை கருத்தில் கொண்டு, மத்திய அரசு, டெல்லி தலைநகர பிரதேசத்திலும், மும்பையிலும், தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பின் சில்லரை விற்பனைக் கடைகள், மற்றும், நடமாடும் வாகனங்கள் மூலம், கிலோ 35 ரூபாய் மானிய விலையில், வெங்காய விற்பனையை தொடக்கி உள்ளது. வரவிருக்கும் நாட்களில், சென்னை, பெங்களுரு, ஐதராபாத், கொல்கத்தா, அகமதாபாத் உள்ளிட்ட நகரங்களிலும், இதே போன்ற விற்பனையை தொடக்க அரசு எண்ணியிருப்பதாக மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

ஜவுளி (13)

ஜவுளித் துறையில் உலகின் முன்னணி நாடாக மேம்படும் திறனும் உள்ளாற்றலும் இந்தியாவிற்கு இருப்பதாக, மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஆடை அலங்கார நாகரீகம் பற்றிய, பரிதி என்னும், நாட்டின் முதலாவது நூலை வெளியிட்டும், விஷன்-நெக்ஸ்ட் இணைய தளத்தை தொடக்கி வைத்தும் அவர் உரையாற்றினார். தேசிய ஆடை வடிவமைப்பு கழகத்தின், இந்த விஷன்-நெக்ஸ்ட் இணைய தளம், ஆடை அலங்கார நாகரீகத்தின் போக்குகளை முன் கூட்டியே கணிக்கவும், வெளிநாட்டு தொழில்நுட்பங்களை நம்பி உள்ள நிலையை மாற்றவும் உதவிகரமாக இருக்கும் என்று அவர் கூறினார். ஜவுளித் துறை இணை அமைச்சர் திருமதி பபித்ரா மார்கரீட்டா இந்நிகழ்ச்சியில் பேசுகையில், பலதரப்பட்ட ஆடை அலங்காரக் கலாச்சாரம் கொண்ட நாடான இந்தியா, உலக சந்தையில், அந்தந்த நாடுகளுக்கு ஏற்ற ஆடைகளை வடிவமைத்து வழங்க முடியும் என்றார்.

வானிலை (8)

மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடமேற்கு வங்கக் கடலில் இன்று காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. வடக்கு ஆந்திரா

மற்றும் தெற்கு ஒடிசா கடற்கரையை ஒட்டி தற்போது நிலவும் இந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, அடுத்த 2 நாட்களில், வடக்கு-வடமேற்கு திசையில் நகரக் கூடும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று முதல், வரும் 11 ஆம் தேதி வரை தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*சிந்தியா* (14)

5-ஜி தொலைத் தொடர்பு சேவைகளை, உலகிலேயே அதிக வேகத்தில் செயல்படுத்திய நாடு, இந்தியா தான் என்று, மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், அஞ்சல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் உரையாற்றிய அவர், 4-ஜி தொலைத் தொடர்பு சேவைகளுக்குத் தேவையான எல்லாத் தொழில்நுட்ப அடுக்குகளையும் உள்நாட்டிலேயே பெற்றுள்ள, உலகின் 6 வது நாடாக, இந்தியா மேம்பட்டு வருவதாக கூறினார். சாதாரண மனிதனின் உலகச் சாளரமாக, தபால் நிலையங்களை மேம்படுத்த வேண்டும் என்றும், அனைத்து சேவைகளையும் மக்களுக்கு வழங்கும் மையங்களாக அஞ்சலகங்கள் திகழ வேண்டும் என்றும், அமைச்சர் வலியுறுத்தினார். அஞ்சல் துறை ஊழியர்கள் எல்லா விதமான

சூழ்நிலைகளையும் சமாளித்து, சிறப்பான முறையில் பணிபுரிந்து வருவதை அமைச்சர் பாராட்டினார். அஞ்சல் துறையின்றி, நாட்டிற்கு வரலாறு இல்லை என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சிங்கப்பூரில், சிங்கப்பூர் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே, 4 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான், நாட்டில் வரி செலுத்துவோர் எண்ணிக்கையை அதிகரித்து இருப்பதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று மாகே-யில், வளர்ச்சி திட்டங்கள் குறித்து, அதிகாரிகளுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

புதுச்சேரியில் இன்று நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, மாநில நல்லாசிரியர் விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.